**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: S.T.C. 252/2018**
**Deposition of witness for prosecution-PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பழனி |
| Father Name | : | திரு.செல்லக்கனி |
| Village | : | காஞ்சிரங்குடி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | வியாபாரம் |
| Religion | : | இந்து |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of 16th day of September 2019.

முதல் விசாரணை:-

நான் இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்ல சொல்ல என்னுடைய வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

எனது தரப்பில் குறியீடு செய்ய வேண்டிய ஆவணங்கள்

1.21.03.2018ம் தேதியிட்டு எதிரி எனக்கு கொடுத்த இராமநாதபுரம் ஆக்ஸிஸ் வங்கியின் ரூ.7,80,000/-ற்கான காசோலை எண்.017309ன் அசல் பு.த.சா.ஆ.1.

2. 26.04.2018ம் தேதியிட்டு புகார்தாரருக்கு வழங்கப்பட்ட அதிகார ஆவணம் நகல் பு.த.சா.ஆ.2

3.22.03.2018ம் தேதியிட்டு எதிரியின் கணக்கில் போதிய பணமில்லை என திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை பு.த.சா.ஆ.3.

4.11.04.2018ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு இரசீதுடன் பு.த.சா.ஆ.4.

5.13.04.2018ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ.5.

6.26.04.2018ம் தேதியிட்டு எதிரியின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு பு.த.சா.ஆ.6.

எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் போதிய பணமில்லை என தெரிந்தும் காசோலை அளித்து, என்னிடம் வாங்கிய கடன் பணத்தை திருப்ப தராமல் மோசடி செய்ததால் அவருக்கு தண்டனை வழங்கவும் அபராதமாக எனது தொகையை பெற்றுத்தரவும் இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

அவகாசம் கோரப்பட்டது. அளிக்கப்பட்டது.